2017 மார்ச் 22]

திரு. தா.மோ. அன்பரசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலந்தூர் தொகுதி சென்னை புறநகரை ஒட்டிய வளர்ந்துவரும் தொகுதியாகும். இந்தத் தொகுதியிலுள்ள படித்த இளைஞர்கள் மற்றும் படிக்கும் மாணவ, மாணவிகள் மின் வழிக் கற்றல்மூலம் பயின்று, தங்கள் திறனை மேலும் வளர்த்துக் கொண்டு, போட்டித் தேர்வுகள்மூலம் வேலைவாய்ப்பை எளிதில் பெற முடியும். இதற்காக கடந்த நிதி ஆண்டில் 1 கோடி ரூபாயை அரசு ஒதுக்கியிருக்கிறது என்று மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். எனவே, நந்தம்பாக்கத்தில் ஒரு மின் வழி கற்றல் மையம் அமைக்க வேண்டுமென்று தங்கள் மூலமாக அரசை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,* Virtual Learning System *மூலமாக* e–learning centre*–ல்* video lectures online *மூலமாகவும்,* offline *மூலமாகவும் மாணவர்களுக்கு கற்பிக்கதரப்படும். அதுமட்டுமல்லாமல், நீங்கள் குறிப்பிட்டது போன்று,* e–content competitive exams*–போட்டித் தேர்வுகளுக்கான அனைத்து* study materials*–ம் அந்த* e–content*–ல் அமையும்* e–book–digitisation of books*-ம் அந்த* Virtual Learning System*–ல் அமையும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.*

வினா வரிசை எண் 69, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். மூர்த்தி, மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

69—

மாணவர் விடுதி

***4515—திரு. கே.எஸ். மூர்த்தி:**

மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2017 மார்ச் 22

பரமத்தி–வேலூர் தொகுதியில் ஆதி திராவிடர் நல மாணவர் விடுதி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திருமதி வி.எம். ராஜலெட்சுமி, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

ஏழைகளுக்கு இதய தெய்வம், எம்.ஜி.ஆர். வழி நடந்த கழகத் தெய்வம், தொண்டர்களுக்கு வாழ்வு தந்த புனித தெய்வம், தமிழனுக்கு குல தெய்வம், அவர்தான் அம்மா என்னும் அன்பு தெய்வம். (மேசையைத் தட்டும் ஒலி) தாயின் திருவடியை வணங்கி, அம்மாவும் கழகமுமே உலகம் என தன் ஆயுளைக் கரைத்த கழகப் பொதுச் செயலாளரையும் வணங்கி, திருத்திய விடையைப் பதிவு செய்கிறேன்.

ஆதி திராவிட மாணவ, மாணவியர் பயன்பாட்டிற்காக செயல்படுவதே இவ்விடுதிகள். அவ்வகையில் தமிழகத்தில் மட்டும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின்கீழ், 1,324 ஆதி திராவிடர் நல விடுதிகளும், 42 பழங்குடியினர் நல விடுதிகளும், 306 உண்டு உறைவிடப் பள்ளிகளும் செயல்பட்டு வருகின்றன. அதில் குறிப்பாக, நாமக்கல் மாவட்டத்தில் மட்டும் 39 விடுதிகள் செயல்பட்டு வருகின்றன. அதில் பரமத்தி–வேலூர் தொகுதியில் மட்டும் 4 விடுதிகள் செயல்பட்டு வருகின்றன. அவை எலச்சிபாளையம், பரமத்தி–வேலூர், மேலகவுண்டன்பட்டி, ஜேடர்பாளையம் ஆகியவை ஆகும். குறிப்பாக பரமத்தி–வேலூரில் ஒரு விடுதி செயல்படுகிறது. அவற்றில் அனுமதிக்கப்பட்ட மாணவர்கள் எண்ணிக்கை 33. ஆனால், தற்போது பயின்று வருபவர் எண்ணிக்கை 22. எனவே, இந்தச் சூழ்நிலையில் பரமத்தி–வேலூர் தொகுதியில் விடுதி துவங்குவதற்கான செயற்குறிப்பு ஏதும் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். மூர்த்தி அவர்கள்.*

திரு. கே.எஸ். மூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரமத்தி–வேலூர் சட்டமன்றத் தொகுதி, அருந்ததியர் மற்றும் ஆதி திராவிடர்கள் அதிகம் வசிக்கிற தொகுதி. இந்த மக்கள் வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழ்பவர்கள். நாமக்கல் மாவட்டம்,*

2017 மார்ச் 22]

கல்வியில் மிகச் சிறந்த மாவட்டமாக விளங்கி வருவதால், அரசு உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளிகளிலே அருந்ததியர், ஆதி திராவிட மாணவர்கள் அதிகளவில் பயின்று வருகின்றனர். அவர்கள் சிறந்த கல்வி வசதி பெற பரமத்தி ஒன்றியத்திலே கந்தன்பாளையத்திலும், கபிலர்மலை ஒன்றியம், கபிலர்மலையிலும் புதியதாக ஓர் ஆதி திராவிட மாணவ, மாணவியர் விடுதி அமைத்துக் கொடுத்திட அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி வி.எம். ராஜலெட்சுமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தன்னிடம் உள்ளதைக் கொடுத்தவர்கள் மத்தியில், தன்னையே ஆதி திராவிட மக்களுக்காகக் கொடுத்த தனிப் பெருந்தலைவர் நமது புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.*

தமிழகத்தில் உள்ள ஆதி திராவிடர் நல விடுதிகளின் எண்ணிக்கை 1,324. நாமக்கல் மாவட்டத்தில் உள்ள ஆதி திராவிடர் நல விடுதிகளின் எண்ணிக்கை 39. பரமத்தி–வேலூர் தொகுதியில் செயல்படும் விடுதிகளின் எண்ணிக்கை 4. பரமத்தி–வேலூரில் செயல்படும் விடுதியின் எண்ணிக்கை 1. பரமத்தி–வேலூர் தொகுதியில் 4 மாணவர் விடுதிகள் இருக்கின்றன. பரமத்தி–வேலூர் தொகுதியில் செயல்படும் விடுதிகளில் உள்ள மொத்த மாணவர்கள் எண்ணிக்கை 180. ஆனால், தற்போது பயின்று வருவோர் மொத்தம் 133 நபர்கள். பரமத்தி–வேலூர் விடுதியில் மட்டும் மொத்த மாணவர்கள் எண்ணிக்கை 33. தற்போது பயின்று வருவோர் 22. எனவே, உறுப்பினரின் கோரிக்கை மாண்புமிகு முதல்வர் அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். மூர்த்தி அவர்கள்.*

திரு. கே.எஸ். மூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரமத்தி–வேலூர் தொகுதிக்குட்பட்ட எலச்சிபாளையம் ஒன்றியம், வேடவன்பட்டியிலே ஒன்றும், பரமத்தி–வேலூரில் வேலூர் பேரூராட்சியிலும் மாணவர் விடுதிதான் இயங்கி வருகிறது. மாணவியர்களுக்கென்று விடுதிகள் இல்லை. இந்த இரண்டு*

இடங்களில் மாணவியர் விடுதி அமைப்பதோடு, வேடவன்பட்டியில் உள்ள மாணவர் விடுதியிலே சுற்றுச்சுவர் இல்லாததால் மிகவும் பாதுகாப்பற்ற நிலையிலே இருக்கிறது. ஆகவே, அந்த மாணவர் விடுதிக்கு சுற்றுச்சுவரும், இரண்டு இடங்களில் மாணவியர் விடுதிகளும் அமைத்துக் கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

நான் கேட்ட கேள்வி, பரமத்தி—வேலூர் தொகுதியிலே ஆதி திராவிடர் மாணவர்களுக்காக புதியதாக இரண்டு இடங்களில் மாணவியர் விடுதி கேட்டிருக்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள், சொன்ன பதிலையே திரும்பச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், நான் கேட்ட கேள்வி இரண்டு இடங்களிலும் புதிதாக மாணவியர் விடுதி வேண்டும் என்று கேட்டிருக்கிறேன். அதை இந்த அரசு பரிசீலிக்குமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி வி.எம். ராஜலெட்சுமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மாணவர்கள் விடுதிதான் கேட்டிருக்கிறாரே தவிர, மாணவியர் விடுதி கேட்கவில்லை. ஏற்கெனவே அந்தத் தொகுதியில் 4 மாணவர் விடுதிகள் இருக்கின்றன. அவ்விடுதிகளில் உள்ள மாணவர்கள் எண்ணிக்கை குறைவாகத்தான் இருக்கிறது. இந்த நிலையில் மேலும் மாணவர்கள் விடுதி கேட்கின்றார்கள். இதுகுறித்து அரசிடம் செயற்குறிப்பு ஏதும் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 70, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். செல்வராசு, மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

70—

குடமுழுக்கு

***6051—திரு. எம். செல்வராசு:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—